*திருகோணமலை*
*18 மே 2026*

***<u>பிரிக்கவொண்ணா சுயநிர்ணய உரிமையை என்றும் விட்டுக்கொடுக்கமாட்டோம் - மே 18, 2026</u>***

***2009 ஆம் ஆண்டில் இதேபோன்றதொரு இறுதி நாள் ஈழத்தமிழர்களின் வரலாற்றில் மட்டுமல்ல, தமது இறையாண் மையைக் காத்துநிற்கும் பொருட்டு நவகாலனித்துவ ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கும் அனைத்து இனங்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததொரு நாளாக அமைகிறது.***

***பன்னாட்டுக் குற்றங்களிலேயே மிகக் கொடூரமானதும், எது இனப்படுகொலை என ஐக்கிய நாடுகள் சபை (ஐ.நா) வரையறுக்கும்போது வல்லரசுகள் தம்மையும் தம் அடிவருடி நாடுகளையும் காத்துக்கொள்வதற்காக மிகச் சூட்சுமங்களை உள்ளடக்கி வரையறுப்பைச் செய்ததுமான இனப்படுகொலையின் உச்ச அரங்கை ஈழத்தமிழ் மண்ணின் முள்ளிவாய்க்காலில் நிறைவுறுத்திய நாள்.***

***அந்நாளில் இருந்து இன்றுவரை, 17 ஆண்டுகள் கடந்தும் நடந்து முடிந்த இனப்படுகொலைக்கான நீதியைப் பெற்றுக்கொள்ள மறுக்கப்பட்டிருக்கிறோம் என்பதையும் தொடரும் மென்-இனவழிப்பான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு உள்ளாகிக் கொண்டிருக்கும் இனம் என்பதையும் நினைவுகொள்ளும் நாளாக இந்நாள் அமைகின்றது.***

***இந்த மென்-இனவழிப்புத் தொடரும் சூழலானது மீண்டும் சரீர இனவழிப்பாக மாறும் மீளநிகழாமையை உறுதிப்படுத்தப்பட மாட்டாது. மீளநிகழாமை உறுதிப்படுத்தப்படுவது நீதியின் இணைபிரியா அடிப்படை.***

***முள்ளிவாய்க்கால் நினைவேந்தலான இந்த இறுதி நாளை அடைவதற்காக தொடங்கப்பட்ட நான்காவது ஈழப்போர் ஈழத்தமிழ் தாயகத்தின் திருகோணமலையில் ஆரம்பித்து கிழக்கின் ஏனைய இரு மாவட்டங்களையும் விழுங்கி பின் மன்னாரில் தொடங்கி வடக்கின் ஏனைய நான்கு மாவட்டங்களிலும் நிகழ்ந்து முள்ளிவாய்க்காலில் முடிவடைந்தபின் அரசு பேணிய புள்ளிவிபர ஆதாரத்துடன் கையளிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் வடக்கில் இறுதி எட்டு மாதங்களில் மட்டும் 146,679 தமிழ் மக்களுக்கு என்ன நடந்தது (அழிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இத்தொகையை விட அதிகம்) எனத் தெரியாதுபோன நிலையில், ஸ்ரீலங்கா அரசுடன் இணைந்து வல்லாதிக்க அரசுகள் பூகோள நலனை அடிப்படையாகக் கொண்ட தமது அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்ள உச்ச இனப்படுகொலையை நிகழ்த்தி முடித்த நாள்.***

***எனினும் இலட்சக்கணக்கானவர்களின் உயிர்களை இழந்தபோதும், வலிந்து கடத்தப்பட்டும், நம்பி கையளித்தும் பல்லாயிரக்கணக்கான இன்னுயிர்கள் காணாமலாக்கப்பட்டுள்ள போதிலும் தமது இறைமையைச் சரணாகதிக்கு உள்ளாக்கவோ, தாமும் சரணடைதலையோ, தலைவணங்குதலையோ தமிழினம் நிகழ்த்தவில்லை.***

***மாறாக தமது உச்ச சுயநிர்ணய உரிமையை விட்டுக்கொடுக்காமல் இறுதிவரை காத்து நின்றதை ஒரு வரலாறாக எம்மிடம் விட்டுச் சென்றிருப்பதுடன், பிரிக்கவொண்ணா எம் சுயநிர்ணய உரிமையைக் காத்து நிற்கவேண்டும் என இந்த இன அழிவுப் போரில் தப்பிப்பிழைத்த ஈழத்தமிழ் மக்களிடமும், தாயகத்தில் தளைக்கும் தலைமுறைகளிடமும், புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களிடமும், அவர்களின் தலைமுறைகளிடமும் உயரிய பணியாக அந்த வரலாற்றின் தொடர்ச்சிக்கான பொறுப்பைக் கையளித்துச் சென்றிருக்கிறார்கள்.***

***அழிக்கப்பட்டபோதும் தலைவணங்காமல், அடகு வைக்காமல், கைவிடாமல், அழித்தொழிக்காமல், நிறுத்தி வைக்காமல், தம் சுயநிர்ணய உரிமையை நீக்கக்கூடிய சரணடைதலைச் செய்யாமல் எமது இறைமையை மீட்டெடுக்கும் கடப்பாட்டை எங்களிடம் கையளித்துச் சென்றிருக்கிறார்கள் என்பதை நினைவுறுத்தும் நாளாகவும் இன்றைய நாளை நாங்கள் காண்கிறோம்.***

அதனால்தான் இன்றைய நாள் ஈழத்தமிழர்களுக்கு மட்டுமன்றி உலகம் முழுவதிலும் பறித்தெடுக்கப்பட்ட தமது இறைமையை மீட்கப் போராடிக்கொண்டிருக்கும் அனைத்துச் சுயநிர்ணய உரிமைகொண்ட இனங்களுக்கும் முக்கியமானதொரு நாளாக அமைகிறது.

என்றென்றைக்கும் ஆறாத வடுவாக நாங்கள் ஒட்டுமொத்தமாகக் கொல்லப்பட்ட, எம்மீதான இனப்படுகொலை யினைக் காத்துநின்ற வலிமை இறுதியாக அழிக்கப்பட்ட இந்நாளில் நாங்கள் முள்ளிவாய்க்காலில் கூடி நின்று எம்மை ஆற்றுப்படுத்துவதற்காக நெஞ்சு கனத்து நிற்கிறோம்.

அந்த வலியை நேரடியாக அனுபவித்த ஒவ்வொருவருடனும் நாங்கள் கரங்கோர்த்து நிற்கிறோம்.

ஒவ்வொரு மே 19ஆம் திகதியிலிருந்தும் எம்மிடம் கையளிக்கப்பட்ட கடமையினை நிகழ்த்த வேண்டிய கடப்பாடு எம்மனைவருக்கும் இருக்கின்றது.

<u>இனப்படுகொலைக்கான நீதியும் எமது அரசியல் பிரச்சனைக்கான தீர்வும்</u>

இனப்படுகொலைக்கான நீதியைப் பெற்றுக்கொள்வதும் எமது அரசியல் பிரச்சனைக்கான தீர்வைப் பெற்றுக் கொள்வதும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டிருந்தாலும் அவை தனித்தனியானவை என்பதை நாம் எச்சந்தர்ப் பத்திலும் மறந்துவிடலாகாது.

இனப்படுகொலைக்கான நீதியைப் பெற்றுத்தரும் என நாம் நம்பிக்கொண்டிருக்கின்ற ஐக்கிய நாடுகள் சபை தனது பொறுப்பை நிறைவேற்ற இன்றுவரை தயாராகவில்லை என்ற உண்மையை. கடந்த 17 வருடங்களாக நிகழ்ந்தவற்றை மீட்டுப்பார்க்கையில் நாம் உணர்ந்து கொள்கிறோம்.

தற்போது 2027 ஜூன் மாதம் வரை கால நீடிப்புச் செய்யப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையர் அலுவலகத்தின் ஸ்ரீலங்கா பொறுப்புக்கூறல் திட்டம் *(OHCHR-Sri Lanka Accountability Project 2021)* குற்றங்களிற் பெருங்குற்றமான இன அழிப்புக்கான குற்றப்பொருள் ஆய்வெல்லையையோ *(Jurisdiction ratione materiae)* அதற்குரிய கால நியாயாதிக்க ஆய்வெல்லையையோ *(Jurisdiction ratione temporis)*, அக்குற்றத்தை அறுதியாக நிறுவுவதற்கு இன்றியமையாத பொதுமனக்கூறு அதற்கும் அப்பாற்பட்ட சிறப்பு மனக்கூறு *(Dolus specialis, apart from the usual Mens rea)* தொடர்பான சான்றுகளையோ சாட்சியங்களையோ, அவற்றின் சாட்சிய ஏற்புடைமையையும் *(Admissibility of evidence)* உரிய மெய்ப்பிக்குந் தர நிலையை *(Required level of standard of proof)* உறுதிப்படுத்துவதற்கேற்ற விதத்திலோ இத்திட்டத்துக்குரிய ஆணையும் *(Mandate)* அதற்கேற்ற செயற்பாடும் இல்லாத நிலை நீடிக்கிறது. தாயகத்தில் நேரடியாகச் சான்றுகளைத் திரட்டும் நேரடி அணுகலையும் *(direct access)* அது உறுதிப்படுத்திக்கொள்ளவில்லை.

இந்த உண்மையின் அடிப்படையில் நீதியைப் பெற்றுக்கொள்ள ஐ.நா. பொறிமுறை மீது தகுந்த அழுத்தங்களை ஏற்படுத்தும் அதேவேளை, அதையே நம்பியிராது சமாந்தரமாக ஏனைய வழிகளை, ஐக்கிய நாடுகள் சபைக்கு வெளியேயும் நாம் நாட வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

எமது அரசியல் பிரச்சனைக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ளும் முயற்சிகளில் மிகப் பிந்திய நடவடிக்கையாக, 1975ஆம் ஆண்டில் தந்தை செல்வநாயகம் அவர்கள் இறைமை மீட்புக்கான வட்டுக்கோட்டைப் பிரகடனத்தை வெளிப்படுத்திய போது வலுவிழந்து போனதும், அன்றிலிருந்து நாம் கைவிட்டதும், எமது சுயநிர்ணய உரிமையைச் சமரசம் செய்வதுமான கூட்டாட்சிக் கதையாடல் (சமஷ்டி) மேலோங்கி வருவதைக் காண முடிகின்றது.

இம்மேலோங்குதல் மிகப் பாரதூரமாக இனப்படுகொலைக்கான நீதியையும் அரசியல் பிரச்சனைக்கான தீர்வையும் ஒன்றாக்கி அவற்றை உள்ளகப் பொறிமுறைகளுக்குள் தீர்த்துக்கொள்ளமுடியும் என்றதொரு மாயையை எமது மக்களின் மீது பல்வேறு வகைகளில் திணிக்க முற்படுவதையும் நாம் காண்கிறோம்.

இந்த மாய வலைக்கு நாம் பலியாக மாட்டோம் என்று இன்றைய நாளில் சபதமெடுத்துக் கொள்வோம்.
பன்னாட்டுச் சட்டத்தைக் கையாளத்தக்கவர்களாக நாம் இருக்கவேண்டுமென்றால் நாம் எமது சுயநிர்ணய உரிமையைச் சமரசம் செய்யாதவர்களாக இருக்க வேண்டும் என்று பன்னாட்டுச் சட்ட ஏற்பாடுகள் வலியுறுத்தி நிற்கின்றன.

ஆகவே சுயநிர்ணய உரிமையே எம் அனைத்து நடவடிக்கைகளுக்கும் அடிநாதமாக அமைகிறது.

ஒன்றுபட்ட மக்கள் சக்தியாக நாம் எழவேண்டும். வலு தான் உலகின் போக்கில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தவல்லது. அந்த வலு ஒன்றுபட்ட சக்தியாக நாம் உருவாகும்போதுதான் எம்மீது கருக்கொள்கிறது. இனப்படுகொலைக்கான நீதியைப் பெற்றுக் கொள்ளவும், தமிழின விடுதலைக்குத் தீர்வை நோக்கி நகரவும், நிகழும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைச் செயற்பாடுகளை வெளிப்படுத்தவும், அதனைத்தடுத்து நிற்கவும் வலுப்பெறும் தமிழினத்தினால் மட்டுமே முடியும்.

இன்று அழுதாலும் சுயநிர்ணய உரிமையை என்றென்றைக்கும் ஈழத்தமிழினம் சமரசம் செய்யாது என்று நாளை உரத்துச் சொல்லுவோம்.

உலகிற் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் தேசிய இனம் ஒன்றின் இணைபிரியா அங்கமாகச் சுயநிர்ணய உரிமையுடனேயே பிறக்கிறான். பிரிக்கவொண்ணா சுயநிர்ணய உரிமையின் பாற்பட்டு உலகத்திலுள்ள அனைத்துத் தேசிய இனங்களுக்கும் உரித்தாக்கப்பட்டுள்ள புனித உரிமைகளின்படி, ஈழத்தமிழ்த் தேசிய இனத்தினராகிய நாங்கள்:

1. 1948ஆம் ஆண்டில் ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை வரைபின்கீழ் குற்றமாக அடையாளப்படுத்தப்பட்டவை நிகழ்த்தப்பட்டுள்ளதா? என்பதையும், அக் குற்றங்களின் நோக்கத்தையும் மதிப்பீடு செய்யும் அதிகாரத்துடன், வலிந்தும், கையளிக்கப்பட்டும் காணாமலாக்கப்பட்டவர்களுக்கான விசாரணையினையும் உள்ளடக்கிய பன்னாட்டு விசாரணையை நிகழ்த்துவதற்காக, பன்னாட்டுச் சுயாதீன மற்றும் பாரபட்சமற்ற பொறிமுறையொன்றை நிறுவ வேண்டும் என்றும், எந்தவொரு விசாரணைக்கும் அளிக்கப்படும் அதிகாரம், இனப்படுகொலை வரைபின்படி, முழுக் காலவரையறையும் உள்ளடக்க வேண்டும் என்றும்,

2. ஈழத்தமிழர் இனப்படுகொலைக்கு ஸ்ரீலங்கா அரசின் பொறுப்பை நிரூபிக்க, இனப்படுகொலைக் குற்றத்தைத் தடுக்கும் மற்றும் தண்டிக்கும் வரைபின் *(Convention on the Prevention and Punishment of the Crime of Genocide)* அகவிதி IX ஐன் கீழ் முழுமையான காலவரையறையையும் உள்ளடக்கும் வகையில், ஸ்ரீலங்கா குடியரசுக்கு எதிராக நீதிக்கான பன்னாட்டு நீதிமன்றத்தில் *(International Court of Justice - ICJ)* அதன் அரச பொறுப்புத் தொடர்பாக வழக்குத்தாக்கல் செய்ய பன்னாடுகளில் ஆகக் குறைந்தது ஒரு நாடேனும் முன்வரவேண்டும் என்றும், தனிநபர் குற்றப் பொறுப்புகளுக்கான விசாரணைகளையும், இனப்படுகொலை ஆரம்பித்த காலவரம்பிலிருந்துமேற்கொள்ளத்தக்க வகையில் விசேட விசாரணை அமைப்பைத் தோற்றுவிக்க வேண்டுமெனவும்,

3. இலங்கையின் வடபகுதியில் உள்ள செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வாராய்ச்சிகளை மேற்பார்வை செய்வதற்காக "மனிதப் புதைகுழி பாதுகாப்பு மற்றும் விசாரணைக்கான சர்வதேச நெறிமுறைகள் - போர்ன்மொத் நெறிமுறை" *(The Bournemouth Protocol)* கீழ் அதிகாரம் வழங்கப்பட்டு பன்னாட்டு நிபுணர் குழுவை அமைக்க வேண்டும் என்றும், வடக்குகிழக்கில் அடையாளப்படுத்தப்பட்டு அகழப்படவிருக்கும் அனைத்து மனிதப்புதைகுழிகளுக்கும் இந்நடைமுறையினைப் பின்பற்ற வேண்டும் என்றும்,

4. பன்னாட்டு மனித உரிமை மற்றும் மனிதாபிமான பாதுகாப்பு வரைபுகளுக்கு முரணான தற்போதுள்ள (6ஆம் திருத்தச் சட்டம் உட்பட) சட்டங்களை நீக்குமாறும், எதிர்காலத்தில் அவ்வாறான திருத்தச்

சட்டங்களோ, புதிய சட்டங்களோ இயற்றப்படுவதை நிறுத்துமாறும் வலுவான அழைப்பை விடுக்க வேண்டும் என்றும்,

5. ஈழத்தமிழினத்தின் அரசியல் வேணவாவை ஒன்றுபட்டு வெளிப்படுத்த வாய்ப்பளிக்கும் பொருட்டு பன்னாட்டு உந்துதல் மற்றும் மேற்பார்வையின் கீழ் பொதுவாக்கெடுப்பொன்றை நடாத்த வேண்டுமென்றும், இதன் முக்கியத்துவத்தை முன்வைக்கும் விதத்தில் எமது குடிசார் அமைப்பு முன்வைத்துள்ள திருகோணமலைப் பிரகடனம் – *2026* ஐ இந்தக் கண்கொண்டு பார்க்குமாறும்

இக்கணத்தில் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

சுயநிர்ணய உரிமையின் உச்சப் பிரயோகமே சுதந்திரம். அதனை வெல்வோம்.

……………………………….. ……..…………………………..

*கலாநிதி. இராமநாதன் சிறீஞானேஸ்வரன்*
*இணைப்பாளர்*

*வனிதா சேனாதிராஜா*
*செயலாளர்*